

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## ‘‘சகல நன்மைகளும்’’ நமக்கு உரித்தாகட்டும்!

‘‘சகல உபகாரங்களும்’’ (ALL BENEFITS) பெற்றுவாழவே தேவன் விரும்புகிறார்! (சங்.103:2). ஆனால், சகல அல்லது எல்லா நன்மைகளையும் வாஞ்சிக்கும் நமக்கு, தேவன் வழங்க விரும்பும் முதல் உபகாரம் ‘‘நம் அக்கிரமங்கள் எல்லாம் மன்னிக்கப் படுவதே’’ஆகும்! இந்த உபகாரம் பெற்றவர்களுக்கே, அடுத்த உபகாரமாகிய ‘‘நம் நோய்கள் எல்லாம் குணமாகும்’’ கிருபையை நிறைவாய் தருகிறார்! (சங்.103:3).

உடலில் பூரண ஆரோக்கியம் இருந்தும், ஒரே ஒரு ‘கேன்ஸர்’ நோய் அல்லது ‘இருதய மாரடைப்பு’ வந்தாலும் உயிருக்குஆபத்து தானே! அதுபோலவே, ‘‘ஒரு அக்கிரமத்தை’’ அல்லது ‘‘ஒரு பாவத்தை’’ மறைத்து வைத்தாலும் ..... ‘‘அக்கிரமங்கள் எல்லாம் மன்னிக்கப்படும்’’ பாக்கியம் இல்லை! (சங்.32:5). ஆம், அனுதினமும் தன்னை சோதித்து, தன் பாவத்தை மறைத்து வைக்காமல், தேவனிடம் அறிக்கை செய்திடும் பரிசுத்த வாழ்க்கை ஓர் பாக்கியமாகும்!

இந்த பாக்கியமே, ‘‘நம் நோய்களையெல்லாம் அவர் குணமாக்கும்’’ அவரது பொய்யுரையாத வாக்கை (சகல உபகாரங்களையும்) நமக்கு அருளிச்செய்கிறது!

*-tr*

பெட்டகம் 19 ஜனவரி 2017 பரல்கள் 1




## 'ஜெப ஜீவியம் இன்றி' மறுரூப வாழ்வு இல்லை!

"இயேசு ஜெபம் பண்ணுகிறதற்கு ஒரு மலையின் மேல் ஏறினார்! அவர் ஜெபம் பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று! அவருடைய வஸ்திரம் வெண்மையாகப் பிரகாசித்தது!" என உரைக்கும் இந்த வசனங்கள் ஓர் அற்புத செய்தியை நமக்குத் தருகிறது (லூக்கா.9:28,29). தங்கள் ஜீவியத்தில் மாறுதல் காண விரும்பும் யாவருக்கும் இது ஓர் நற்செய்தியாகும்! எந்த நெருக்கத்தின் நேரத்திலும், ஒவ்வொரு சோதனையின் நேரத்திலும் .....ஜெபம் செய்வதற்கு தேவனிடம் ஏறிச் செல்லும் யாவரின் 'முக ரூப' ஜீவியமும் கண்டிப்பாய் மாறுதலடையும் என்பதற்கு இயேசுவே இந்நிகழ்ச்சியில் உத்திரவாதம் தந்துள்ளார்! உங்களின் 'ரூபம்' கிறிஸ்துவின் சாயலில் மாறுவது மாத்திரமல்ல, உங்கள் நடை – உடை ஆகிய வெளிப்புறமும் தேவபக்திக்குரியதாய் 'வெண்மையான பிரகாசம்' பெற்றிடும்!!

ஐசுவரியவானுக்கு உரைக்கப்பட்ட 'சிலுவையின் உபதேசத்தைக்' கேட்டு சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள்! ஆனால் "யார் இந்த சிலுவையின் வழி சென்றிட முடியும்?" எனவும் கூறிக்கொண்டார்கள்! (மாற்கு.10:24,26). இங்குதான், இயேசு தமது நற்செய்தி கூறினார்! "இது மனுஷனால் கூடாது! தேவனால் எல்லாம் கூடும்!" என்றார் (வசனம்.27). சத்தியம் கேட்டால் மாத்திரம் போதாது....... எல்லா சோதனை நேரத்திலும் தேவனை நோக்கி ஜெபித்து, ஜெபித்து பழகியவர்கள் 'முகரூபம்' நிச்சயமாய் மறுரூபமடையும்!

*-Ed*

### முக்கிய அறிவிப்பு

2017 'பரலோக பொக்கிஷங்கள்' வருட சந்தா ரூ.120/– M.O. செய்து அல்லது ஆன்லைன் மூலம் புதுப்பித்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி. புதுப்பிக்காதவர்கள் ஜனவரி 15 தேதிக்குள் புதுப்பிக்க வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100/– அயல்நாடு ஒரு பிரதி ரூ.700/– அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும். புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!


கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## மங்களம் செழிக்கும் "புதிய உடன்படிக்கை" பிரவேசம்!

**யோ**வான்ஸ்நானகன் சிறைச்சாலையில் இருந்தபோது, இயேசு மேசியாதானோ? என்ற சந்தேகம் அவருக்கு தோன்றத் தொடங்கியது (மத்.11:2,3). இந்த யோவான்ஸ்நானகன், வானம் திறக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மீது இறங்கியதைக் கண்டவர்! மேலும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்ததையும் கேட்டவர்! (மத்தேயு.3:16,17). ஒருவேளை, நாம் இதுபோன்ற ஒரு காட்சியை ஒரே ஒரு தடவை கூட கண்டு, கேட்டிருந்தால்..... அதன் பின்பு ஒரு சந்தேகம் கூட நமக்கு ஏற்பட்டிருக்காது! ஆனால், பழைய உடன்படிக்கையில் வாழ்ந்த சிறந்த தேவதாசன் யோவான்ஸ்நானகன் கூட இயேசுவை சந்தேகிக்கத் தொடங்கியதை காண்கிறோம்.

"இந்த பூமியில் பிறந்த யாரைக் காட்டிலும் மிகச் சிறந்த மனிதன்" என இயேசுவால் அறிவிக்கப்பட்ட இந்த யோவான்ஸ்நானகனுக்கு, **இயேசுவின் மீது ஏன் சந்தேகம் ஏற்பட்டது?** ஏனென்றால், இயேசு குருடர்களின் கண்களை திறந்து, வியாதியஸ்தர்கள் யாவரையும் சொஸ்தமாக்குகிறார் என்ற ஆச்சரியமான செயல்களை இந்த யோவான்ஸ்நானகன் கேள்விபட்டார். ஆகவே "இத்தனை அற்புத செயல்களை செய்பவர், ஏன் இந்த ஏரோதுவை அழித்து விட்டு தன்னை சிறைக்கூடத்திலிருந்து விடுதலை செய்திருக்கக்கூடாது?" போன்ற சந்தேக எண்ணங்கள் அவருக்கு தோன்றத் தொடங்கியது.

ஆம், பழைய - உடன்படிக்கை சிந்தையின் அமைப்பில் "ஒருவன் சிறையில் தள்ளப்படுவதென்பது" சாத்தியமே இல்லை! இதற்கு மாறாக புதிய உடன்படிக்கையில் பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் இருந்தபோது, அவர்கள் தேவனை சிறிதுகூட சந்தேகிக்காமல், அந்த நடு இரவிலும் அவரைப் பாடி ஸ்தோத்திரம் செய்தார்கள். இதுவே, ஒருவன் பரிசுத்தாவியினால் நிறைந்து புதிய உடன்படிக்கையில் பிரவேசிக்கும் போது சம்பவிக்கும் மிகப்பெரிய வித்தியாசமாகும்!

ஒரு கிறிஸ்தவன், தன் வாழ்வின் கஷ்டமான சூழ்நிலைக்குள் பிரவேசிக்கும்போது "இந்த கஷ்டத்தைக்கொண்டு வந்த மனுஷனை தேவன் கொன்று போட்டு, என்னை இந்த சூழ்நிலையிலிருந்து விடுவிக்காமல் இருப்பது ஏன்?" என சிந்திக்கத் தொடங்கினால்.....

இந்த சிந்தையைக்கொண்ட அந்த நபர் கண்டிப்பாய் பழைய உடன்படிக்கையின் நபரே ஆவார்!

இன்றைய திரளான விசுவாசிகள், பழைய உடன்படிக்கையின் கீழ்தான் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் விபச்சாரம் செய்தால் "ஓ பரவாயில்லை, **தாவீது கூட விபச்சாரம்** செய்தாலும்..... அவனோ, தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாய் இருந்தான்! தேவனும் அவனுடைய பாவத்தை மன்னித்துவிட்டார்!!" என்றே தங்களுக்குள் கூறிக்கொள்கிறார்கள். இவர்கள் மனச்சோர்வு அடையும்போது "போகட்டும், வல்லமையான தீர்க்கத்தரிசி **எலியா கூட மனச்சோர்வு** அடைந்தானே!" எனவும் சொல்லிக்கொள்கிறார்கள். இவர்கள் மூர்க்கம் கொண்டு, தங்கள் வீட்டிலுள்ள பொருட்களை கோபத்துடன் உடைத்தவுடன் "இது என்ன காரியம்? தேவனுடைய ஜனத்திற்கு நியமிக்கப்பட்ட தலைவனாகிய **மோசே கூட கடுங்கோபம்** கொண்டு, தேவனே அருளித் தந்த இரண்டு கற்பலகைகளை உடைத்துப் போடவில்லையா?" எனவும் சாதுரியமாய் சொல்லிக் கொள்கிறார்கள். இவ்வாறு, தங்கள் ஜீவியத்திலுள்ள ஒவ்வொரு பாவத்திற்கும், பழைய உடன்படிக்கையிலுள்ள ஏதாகிலும் ஒரு நபரை காண்பித்து, தங்கள் செயலை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள்!

ஆனால், புதிய உடன்படிக்கையை ஆரம்பித்து வைத்த இயேசு எப்போதாவது கோபம் அடைந்தாரா? எதையாகிலும் உடைத்தாரா? என்றைக்காவது மனச்சோர்வடைந்து ஒரு சூரைச்செடியின் கீழ் போய் உட்கார்ந்தாரா? ஒருபோதும் இல்லை!

பழைய உடன்படிக்கை கிறிஸ்தவர்கள் மோசே, தாவீது, எலியா ஆகிய இவர்களின் மாதிரியை முன்வைத்து தங்கள் ஜீவிய ஓட்டத்தை ஓடுகிறார்கள்! ஆனால் புதிய உடன்படிக்கை கிறிஸ்தவர்களோ, தங்கள் ஜீவிய ஓட்டத்தை **இயேசுவை நோக்கிப் பார்த்து** ஓடுகிறார்கள். பழைய உடன்படிக்கை தாசர்களை சுட்டிக்காட்டி ஓடும் இந்த கிறிஸ்தவர்கள் "சிறிதேனும் தன்னலமின்றி ஜெபித்த" மோசேயின் மாதிரியை ஏன் பின்பற்றவில்லை? அல்லது, தனக்குரிய யாவையும் விட்டுவிட்டு, தேவனுடைய முகத்திற்கு முன்பாக வாழ்ந்த எலியாவின் நல்ல முழு இருதயத்தை ஏன் பின்பற்றவில்லை? இவர்கள் தங்களின் பாவங்களுக்கு சாக்குப்போக்கு கண்டுபிடிப்பதற்காக மாத்திரமே, இந்த பழைய உடன்படிக்கை தாசர்களை உற்றுப்பார்க்கிறார்கள்.

நம்மைப் பாவத்திலிருந்து முற்றிலும் விடுதலை செய்வதற்காகவே வேதபுத்தகம் எழுதப்பட்டது! ஆனால், நீங்கள் செய்யும் பாவங்களுக்காக வேதப்புத்தகத்தில் ஆதாரத்தை தேடினால், நீங்கள் வஞ்சிக்கப்பட்டு போவதற்கு, தேவன் உங்களை தாராளமாய்

அனுமதித்து விடுவார். ஆகவே, உங்கள் கோபத்திற்கும் அல்லது உங்கள் விபச்சாரத்திற்கும் அல்லது உங்கள் மனச்சோர்விற்கும் சாக்குப்போக்கு கண்டுப்பிடிக்க எக்காலத்தும் வேத வாக்கிய ஆதாரத்தை தேடுவதற்கு முயற்சிக்காதீர்கள்! புதிய ஏற்பாடு "இயேசுவின் ஜீவியத்தை நமக்கு காட்டுவதற்கென்றே" நமக்கு அருளப்பட்டதாகும்! ஒருபோதும் மனச்சோர்வடையாத அல்லது கோபமடையாத அல்லது சிந்தையில் அசுத்தம் கொள்ளாத இயேசுவின் ஜீவியத்தில் நாமும் பங்கடைய வேண்டும் என்பதேயாகும்! ஆகவே, இன்று முதற் கொண்டு, புதிய ஏற்பாட்டை இந்த கண்ணோட்டத்தில் காண வேண்டுமென்றே உங்களை உற்சாகப்படுத்துகிறேன்! (2கொரி.3:18).

யோவான்ஸ்நானகன் சிறைப்பட்டபோது, தேவனை சந்தேகித்தான். ஆனால், இயேசுவை ரோம போர்ச்சேவகர்கள் பிடித்தப்போது இயேசு என்ன செய்தார்? அவர் சொன்னார் "கணப்பொழுதில் என்னை விடுவித்திட 72,000 தூதர்களை நான் அழைத்திருக்க முடியும்" எனக்கூறினாலும்..... அவரோ, அப்படிச் செய்யவில்லை! ஆகவேதான் யோவான்ஸ்நானகனுக்கு இயேசு அனுப்பிய செய்தியில் "நீங்கள் யோவானிடத்தில் போய், குருடர் பார்வையடைகிறார்கள்! மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்! தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது!" என யோவானிடம் அறிவிக்கும்படி கூறினார் (மத்.11:4,5).

புதிய உடன்படிக்கை சுவிசேஷம், பாவத்திலிருந்து விடுதலை பெறும் நற்செய்தியேயாகும். அப்படியில்லாமல், ஏரோதுவைக் கொன்றோ அல்லது சீஷரைக் கொன்றோ அல்லது பரிசேயர்களைக் கொன்றோ சிறைச்சாலை யிலிருந்து வெளியே வரும் விடுதலை அல்ல!

ஆம், தேவன் அனுமதித்து அனுப்பும் எதுவாயிருந்தாலும் அது நமக்கென்று வைத்த மிக அருமையானது! என்றே நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

ஆகிலும், யோவான்ஸ்நானகன் சந்தேகித்ததை, நம் ஒருவராலும் குறை பேசிட இயலாது. ஏனென்றால், இன்று நாம் புதிய உடன் படிக்கையில் "பரிசுத்தாவி நமக்குள் தங்கி வாழ்வதைப் போன்ற பாக்கியம், அன்று யோவான்ஸ்நானகன் பெற்றிருக்கவில்லை. ஆம், அவரோ கிருபையின் கீழ் ஜீவிக்காமல் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஜீவித்தார்!

இன்று கிறிஸ்தவர்கள் எனக் கூறிக்கொண்டு, பரிசுத்தாவியின் நிறைவையும் பெற்றிருப்பதாக உரிமை பாராட்டுவோரின் நிலை என்ன? அவர்கள் இன்னமும் பாவத்தாலும், சந்தேக கலக்கத்தாலும் பீடிக்கப்பட்டிருந்தால்..... அதை நாம் என்னவென்று சொல்வது?

அப்படியிருந்தும், ஜனங்களிடத்தில் காணும் சிறந்ததொன்றை பாராட்டும் இயேசுவின் ஓர் சௌந்தர்யம் நிறைந்த மாதிரியை நாம் மீண்டும் இங்கே காண்கிறோம்: “ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை” என்றே இயேசு பாராட்டினார். இயேசு கூறிய இந்த வசனத்தின்படி, அவர் பிறப்பதற்கு முன்பாக எந்த மானிடன் பெரியவனாயிருந்தான்? அது, யோவான்ஸ்நானகனே அல்லாமல், இன்று அநேக கிறிஸ்தவர்கள் கற்பனை செய்யும் இயேசுவின் தாயாகிய மரியாள் கூட இல்லை! அப்படியே யாராகிலும் மரியாளைப் போற்றிப் பாட விரும்பினால், அதைவிட அதிகமாய் யோவான் ஸ்நானகனைப் போற்றி பாடவே முன்வரவேண்டும்!

தொடர்ந்து இயேசு கூறும்போது “பரலோக இராஜ்ஜியத்தில் சிறியவனாயிருக்கிறவன், யோவான்ஸ்நானகனிலும் பெரியவனாயிருக் கிறான்” எனக் கூறினார் (மத்.11:11). அது ஏன் தெரியுமா? புதிய உடன்படிக்கையில் பிரவேசித்த ஒரு சிறியவன்கூட “ஆண்டவரே இந்த சிறையிலிருந்து, நீர் ஏன் என்னை விடுவிக்கவில்லை?” எனக் கூறமாட்டார்கள். ஏனெனில் “சகலத்தையும் தேவன் அவனுடைய நன்மைக்காகவே நடக்கும்படி கிரியை செய்கிறார்” என்பதை அவன் நன்கு அறிந்திருப்பான்! இன்று உங்களுக்கு யார் மாதிரியாய் இருக்கிறார்கள்? நாம் பின்பற்றுவதற்கு ஏதுவான நல்ல குணாதிசயங்கள் ஆபிரகாம், மோசே, எலியா மற்றும் யோவான் ஸ்நானகன் ஆகிய இவர்களிடத்தில் ஏராளம் இருக்கிறதல்லவா? எனவே, அவர்களின் தோல்விகளைப் பின்பற்றாமல், நன்மையான வைகளை மாத்திரமே நாம் பின்பற்றிட முடியும். இருப்பினும், சத்தியம் என்னவென்றால் “**இன்று இயேசு மாத்திரமே நமக்கு மாதிரி**”.

மத்தேயு.11:12 ல் இயேசு கூறும்போது “பரலோக இராஜ்ஜியம் பலவந்தம் பண்ணப்படுகிறது. **பலவந்தம் பண்ணுகிறவர்கள்** அதைப் பிடித்து கொள்ளுகிறார்கள்” எனக்கூறினார். ‘பலவந்தம் செய்கிறவர்கள்’ என்றால் என்ன அர்த்தம்? வெளிப்பிரகாரமாய் ஒரு கிறிஸ்தவன் எப்போதுமே ‘ஓர் சமாதான புருஷனாகவே’ இருந்திட வேண்டும்! ஆனால், உள்ளான ஜீவியத்தில், கர்த்தரைப் பின்பற்றும் வழியில், தடையாய் வரும் யாதொன்றின் மீதும் அவன் பலவந்தம் செய்வான்! ஆம், அவன் பாவத்திற்கும், சாத்தானுக்கும் எதிராய் வலிமையுடன் எதிர்த்து நிற்பான்! இதுபோன்ற அம்சம் பெற்றவர்கள் மாத்திரமே “தேவ இராஜ்ஜியத்தை சுதந்தரித்து, புதிய உடன்படிக்கைக்குள் பிரவேசிப்பார்கள்!” நீங்கள் தேவனை முழு இருதயமாய்

நேசிப்பதற்குத் தடையாய் வரும் ஒவ்வொரு பிடிப்பிலிருந்தும் விடுப்பட்டு வாழ 'பலவந்தம்' செய்யவில்லையென்றால், இயேசுவை பின்பற்றும் சீஷர்கள் அல்ல! இதுபோன்ற உங்கள் பிடிப்பு உங்கள் பெற்றோர்கள் மீதோ அல்லது உங்கள் வேலையின்மீதோ அல்லது உங்கள் பணத்தின் மீதோ அல்லது ஒரு பெண்ணின் மீதோ அல்லது வேறு யாதொன்றின் மீதோ இருந்தால்..... நீங்கள் மூன்றாம் தர கிறிஸ்தவனாக மாத்திரமே இருந்திட முடியும்! ஆம், நீங்கள் நிச்சயமாய் பழைய உடன்படிக்கை இஸ்ரவேலர்களைக் காட்டிலும் எந்த விதத்திலும் மேன்மையானவர்கள் அல்ல. அது ஏனென்றால் அவர்கள் தங்கள் சிந்தையை பூமிக்குரியவைகள் மீது வைத்திருக்கிறதைப் போலவே நீங்களும் வைத்திருக்கிறீர்கள்! ஆனால் ஆண்டவரோ, மங்களம் செழிக்கும் புதிய உடன்படிக்கையின் **'பரலோக சிந்தைக்குள்'** நீங்கள் யாவரும் பிரவேசிக்கவே விரும்புகிறார்!!

– சகரியா பூணன்

---

## கணவனின் துன்பத்தில் 'பக்தியான பிரதிபலிப்பு' காட்டும் மனைவி!

**த**ன் குடும்பம் கடும் சோதனைக்குள் சென்ற சமயம் யோபுவின் மனைவி, "தேவனைத் தூஷியும்!" எனத் தன் புருஷனிடம் குமுறினாள். தன் கணவன் மூலமாய் அவள் பெற்றிருந்த ஏராளமான ஆஸ்திகள், நன்மைகளின் காலத்தில், யோபுவின் மனைவி "தன் கணவனை" போற்றியிருப்பாள்! அவனுக்கு கீழ்படிந்து, தாழ்மையான பணிவிடையும் செய்திருப்பாள்! இன்றும் அப்படித்தானே, அனேகருடைய அன்பு, பொன் பொருளை சார்ந்து மாயமாய் உள்ளது! அது, நிபந்தனைக்கு உட்பட்ட மானிட அன்பு, தெய்வீக அன்பல்ல! ஆம், சோதனை நேரத்தில் அவள் பிரதிபலித்த துர்கிரியை துக்கமானதன்றோ!! தன் மாறுபாடான துர்கிரியையால் "தேவன் யோபுவுக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்" என்ற தனது எண்ணத்தை தீர்க்கமாக அறிவித்து தனது செய்கையால் தன் புருஷனின் முதுகில் ஓங்கிக் குத்திவிட்டாள்!!

தன் கணவன் யோபு, ஓர் உத்தம நீதிமான் என்பதை அவள் அறிந்திருந்தாள். ஆண்டவரே அதை ஆமோதித்து அறிவித்திருந்தார்! ஓர் நீதியுள்ள தேவன், தன் கணவனை ஒருபோதும் "தண்டிக்கவே முடியாது" என்பதை அவள் அறிந்திருக்க வேண்டும். இந்தப் பாடுகளின் மூலம் **தேவன் ஏதோ ஓர் நோக்கத்தை தன் கணவனுக்காக விசேஷமாய் வைத்திருக்கிறார்** என்றுதான் அவள் அறிந்திருக்க வேண்டும்!! அவள் யோபுவிடம் சரியான முறையில் பிரதிபலித்து "என் பிரியமுள்ள கணவனே, எவ்வளவோ பெரிய மனிதர்களைக்

*காட்டிலும், இப்போது தேவன் உங்களைத்தான் அதிகமாய் ஆசீர்வதித்து விட்டார்! இன்னமும் உங்களை அதிகமாக ஆசீர்வதிக்க வேண்டும் என்று கருதிதான், அவர் உங்களை இப்போது சோதித்துப் பரீட்சிக்கிறார்" என கூறியிருக்கலாம்!*

**எனவே ஒருபோதும் இல்லாத அளவு எல்லாமே அதிக இருளாய்த் தோன்றும் தருணங்களில், நீங்கள் கர்த்தர் மீது முழு நம்பிக்கையும் வைத்து அவருக்காகவே காத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்!**

*அப்போது மாத்திரமே, இறுதியில் தேவன் உங்களை அளவில்லாது ஆசீர்வதிக்கப்போவதை நீங்கள் நிச்சயமாய் காண்பீர்கள்! தேவன் உங்களை அதிகமாய் நேசிக்கிறார் என்பதையும் புரிந்து கொள்வீர்கள்!*

*இவ்வாறு தாழ்மையோடும் பொறுமையோடும் யோபுவின் மனைவி கூறியிருந்தால், அவ்வார்த்தைகள் யோபுவிற்கு எவ்வளவு பெரிய ஆறுதலையும் உற்சாகத்தையும் அளித்திருக்கும்! ஆம், சுற்றியுள்ள அவன் நண்பர்களெல்லாம் மாறிமாறி அவனைக்* **கூரிய வார்த்தைகளால் குற்றம் சுமத்திக்** *கொண்டிருந்த அந்த வேளையில், அவளின் வார்த்தைகள் ஓர் ஔஷதம் போல் இருந்திருக்கும்! ஆ, இதுவன்றோ, கிறிஸ்தவ மனைவியர்கள் யாவரும் வாழ்ந்து சுதந்தரிக்க வேண்டிய பொன்னான ஜீவியம்!!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## தன்னைவிட்டு கிறிஸ்து விலகியதை உணரமுடியாத காலம் இது!

***சி****றந்த பரிசுத்தவான்களாய் திகழ்ந்த யாவரிடமும் காணப்பட்ட ஓர் அதிசயமான குணாதிசயத்தை நாம் யாவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றே நான் அதிக பாரம் கொண்டிருக்கிறேன்: அந்த பரிசுத்தவான்களிடம் காணப்பட்ட* **"ஆவிக்குரிய உணர்வுள்ள ஜீவியமே"** *நமக்கும் காணப்பட வேண்டும். இவர்கள் எப்போதெல்லாம், தங்கள் உள் உணர்வில் தூண்டுதல் பெற்றார்களோ, அதற்கிணங்க உடனே கிரியையும் செய்தார்கள். இவ்வித உணர்வு பூர்வமான செயலை என்றோ சில நாள் அல்ல .... தங்கள் ஜீவ காலமெல்லாம் அதைப் பெற்று வாழ்ந்தார்கள்!*

*இந்த "ஆவிக்குரிய உணர்வை" ஒருவன் தன்னில் அப்பியாசித்து, அதை பெருக்கிக் கொண்டே செல்ல முடியும்! அல்லது, அந்த 'உணர்வுகளை' அசட்டை செய்து, அவைகளை அழித்துப் போடவும் முடியும்!! இத்தகைய 'உணர்வானது' பரத்திலிருந்து இறங்கி, ஒருவனை சுற்றிவளைத்து ஆட்கொண்டுவிடும் என எண்ணி விடாதீர்கள். அது, தேவன் ஒருவனுக்கு 'ஈவாய்' தருவதே ஆகும். ஒன்று, அதை அவன் பெற்றுக்கொள்ளலாம், அல்லது அதை*

உதாசினப்படுத்தி விடலாம்!! இதுவே இன்றைய "சுவிசேஷ ஊழிய வட்டாரத்தில்" காணப்படும் பெரும் வீழ்ச்சியாய் இருக்கிறது. இன்றைய ஊழியங்கள் அனைத்தும் பெரும்பாலும், உடனடி செய்கையாகவே செயல்படுகிறது.

**தேவனுக்கு காத்திருப்பதும், அவர் தரும் உணர்வைப் பெற்று கிரியை நடப்பிப்பதும் இவர்களுக்கு வெகுதூரமாய் இருக்கிறது! ஆகிலும் இவர்களோ, தங்களது ஆவிக்குரிய வெறுமையை சற்றும் உணராதவர்களாய், அதை மூடுவதற்கு ஒரு வேத அதிகாரத்தை வாசித்து, சுருக்கமான ஓர் ஜெபம் செய்துவிட்டு வெறுமையின் ஜீவியத்திலேயே கடந்து போகிறார்கள்!**

இதுபோன்ற துயரமான வீழ்ச்சியிலிருந்து ஒருவன் விடுதலையை விரும்புவது கூட இன்று அபூர்வமாய் இருக்கிறது. "ஓர் உறுதிபூண்ட தீர்மானத்தோடு" வேதம் வழிவகுத்த இந்த பூர்வ வழிக்குத் திரும்பிடவே நாம் வகை தேட வேண்டும்! அப்படி இருந்தால், அவர்கள் இழந்துபோன தங்கள் ஆவிக்குரிய உணர்வுகளை மீண்டும் பெற்றிட முடியும்!!

ஆம், "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருப்பது" ஒன்றே நமது பெலனாய் இருக்கிறது! (கொலோ. 1:27). இந்த பாக்கியமான நிலையை "தன் ஆவிக்குரிய விழிப்பான உணர்வை" வைத்து பாதுகாத்துக் கொண்டவன் "பிசாசுக்கு" ஒருபோதும் அஞ்சிடமாட்டான். ஒருவேளை, சாத்தான் என்னை சுளகில் வைத்து புடைத்திட தீர்மானிக்கலாம்...... நான் அறியாத பயங்கரங்களை என்மீது ஏவிவிடலாம்! அதினாலென்ன? "நான் ஒன்றாய் இணைந்துள்ள அந்த பெரியவரை அவனால் என்ன செய்திட முடியும்? எனக்குள் வாசமாயிருக்கும் அந்த பெரியவரை ஜெயித்திட அவனால் கூடுமா? என் சுபாவத்தை மாற்றி என்னுள் வாசம் செய்யும் அந்த பெரியவரின் சுபாவத்தை அவனால் வென்றிட முடியுமா? ஒருக்காலும் முடியாதே!!

கிறிஸ்துவாகிய அந்த விலையேறப்பெற்ற பொக்கிஷத்தை எக்காலத்தும் இழந்திடாதிருக்க ஜாக்கிரதை கொண்டிருங்கள்! தேவனோடு கொண்ட தனிமைக்கும், தியானத்திற்கும் இன்றைய நாட்களை காட்டிலும் அதிக அவசரமான நாட்கள் இதற்கு முன்பு இருந்ததில்லை! இன்று, அது அத்தனை அவசரமானதாகும்! தேவனோடு அமரவும், அவரது வேத தியானத்தில் நம்மை ஆழ்த்திக் கொள்வதுமே "விசுவாசத்தை" நம் நெஞ்சில் பெற்று வாழ வகை செய்திட முடியும்!

– A.W.டோசர்

## ஆபரணம், பகட்டு வஸ்திரங்களை 'மாயை' என கண்டேன்!

**எ**ன் கணவர், தொடர்ச்சியான வியாதிப்படுக்கையிலிருந்து விடுதலை பெற்றபடியால் *'ஒர்லியான்'* பட்டணத்திற்கும் பின்பு *'டுரைன்'* பட்டணத்திற்கும் பயணமாய் சென்றார். இந்த இரு பட்டணத்திற்கும் நான் அவரோடு சென்ற சமயம், ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் எங்களை சந்தித்தார்கள். அந்த சமயங்களில் "என் அழகின் மாயையை" வானளாவ புகழ்ந்து, என்னை அழகு ராணியைப்போல் கண்கொட்டாமல் ரசனை செய்தார்கள்! இவ்வாறு **'மக்கி மறைந்து போகும் மாயையான அழகை'** என் உறவின, நண்பரான புருஷர்கள் புகழ்ந்து பாராட்டுவதைக் கண்டு, அவர்களின் மதியீனத்தை தெளிவாய் கண்டேன்! 'மாயை' போற்றப்படும் அந்த சூழ்நிலைகளிலிருந்து, ஒரு ஆத்திரமான கோபத்துடன் விடுதலை பெறவே நான் துடித்து நின்றேன். இயற்கையாகவே பெற்ற லௌகீக அழகும், தெய்வ கிருபையும், ஒன்றுக்கொன்று போரிடும் தொடர்ச்சியான போர்க்களத்தையே நான் சந்தித்தேன்!

இயற்கையாய் பெற்ற வசீகரம், ஜனங்களின் பேரார்வத்தை தூண்டிவிடுகிறது......
ஆனால், தெய்வ கிருபையோ, அவைகளை முற்றிலும் உதறி எதிர்த்து நிற்கிறது.

இருப்பினும், இந்த மதியீனமான புருஷர்கள் என் இளமையையும், அழகையும் கண்டு அதுவே 'உயர்ந்த இலட்சணம்' என்ற அவர்களின் போற்றுதல், என் சோதனைக்கு ஏற்பட்ட அபாயமாயிருந்தது! இந்த மதியீன மாந்தர்களுக்கு, சகல நற்குணத்தின் இலட்சணமும் தேவன் ஒருவரிடம் மாத்திரமே உண்டு என்பதை அறியாது மாயையில் மிதந்ததைக் கண்டேன்! நானோ, அவரின் நற்குண பாதுகாப்பை இழக்கும் அடுத்த கணமே, பெலஹீனமான என் அற்ப மாயைக்குள் வீழ்ந்து விடுவேன் என்பதை உணர்ந்து, அவரையே தஞ்சமாக பற்றி கொண்டேன்!

எப்போதெல்லாம் என் அழகின் மாயை உயர்த்தப்பட்டதோ, அப்போதெல்லாம், என் ஆவியில் நிச்சயமாய் பின்மாற்றம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதை அறிந்து, ஆலயத்தில் "பாவ அறிக்கை செய்வதற்கு" விரைந்து சென்றேன். நான் முழங்கால்படியிட்டு, வேதனையுடன் நான் அறிக்கை செய்ததை கேட்ட பாதிரியார், என் உணர்வைக் குறித்து சிறிதுகூட அக்கறை அற்றவரைப்போல் இருந்தார். இன்னும் நடந்த மதியீனம் என்னவென்றால், அந்த பாவ சங்கீர்த்தன பாதிரியார் "தேவன் அருவருத்த உலக அழகை" அவரும் புகழ தொடங்கி விட்டார்! சரீர வசீகரமும் 'திவ்ய இலட்சணம்' என

மார்க்கத்தார்களும் கணக்கீடு செய்தது, என் மனதை நோகச் செய்தது. தேவனுடைய பார்வையில் இவைகள் அருவருப்பானவை என்பதை நான் கண்டேன்..... இவர்களோ, அதைக் காணவில்லை!

தெய்வ கிருபைகளை முன்வைத்து, என்னுடைய மாசுகளை சுட்டிகாட்டுவதற்கு பதிலாக, ஒருவருக்கொருவர் ஒப்பிட்டு பார்க்கும் வகையில், நான் பெற்ற மாயை அழகே மெய்யான வசீகரம் என்றும் கூற துவங்கி விட்டார்கள்!

எனக்குள் படிந்திருந்த இந்த மாயையின் மாசுகளை கழுவிக்கொள்ள உதவி செய்யாமல், என் பெருமைக்கு தூபம் காட்டி 'முகஸ்துதி' செய்தார்கள். ஆனால், தேவன் என்னை கடிந்து கொள்கிறார் என்ற என் உணர்வை.... இவர்களோ, சாதாரண பிழைதா னென நியாயப்படுத்தி, என்னை ஆலய வளாகத்திலிருந்து அனுப்பி விட்டார்கள். ஆனால் எனக்கோ, என் மனதில் படிந்த மாசுகள் தேவனுக்கு முற்றிலும் பிரியமில்லாதிருந்ததை தெளிவாய் கண்டேன். ஆகவே நான் திரும்பிச் சென்ற அந்த நேரத்தில், **ஏராளமான கிருபைகளை தேவன் என் மீது பொழிந்து** என் மாசுகளை எல்லாம் அகற்றியதை உணர்ந்து உள்ளத்தில் பரவசமான மகிழ்ச்சி அடைந்தேன்.

தந்திரமான பாவத்தின் கொடுமையை, அந்த பாவத்தை வைத்து மாத்திரமே அளந்துவிட முடியாது என்ற உண்மையை நான் அன்று கற்றுக் கொண்டேன்.

ஆம், அந்த பாவத்தை செய்கின்ற நபரின் தரத்தை வைத்தே, பாவத்தின் கொடுமையை விளங்கிக் கொள்ள முடியும்! ஒரு தூய மணவாளியின் சிறிய உண்மையற்ற தவறுகூட, அவளுடைய கணவனுக்கு மிகுந்த துயரத்தை தந்து விடும்.

ஒருவேளை, அதே கணவன், தன் சொந்த வீட்டில் 'பெரிய பிழைகளைச் செய்தாலும்' அது அவனுக்கு ஒன்றுமில்லாததுபோல் தோன்றக் கூடும்! ஆகவே பாவத்தின் கொடுமை 'அதைச் செய்யும் நபரின் தன்மையை' சார்ந்தே இருக்கிறதென்பதை அறிந்து, நாம் தேவனுக்கு பயந்திருக்கக்கடவோம்.

என் கழுத்தை மறைத்து போடப்பட்டிருந்த நகைகளை, என் ஆண்டவர் மீது கொண்ட அன்பினிமித்தம், நான் அகற்றியதைக் கண்ட கணவன் உட்பட, என் வீட்டார்களால் அதிக கஷ்டத்திற்கு உள்ளானேன். இருப்பினும், என்னுடைய கணவரோ, ஒரு இளவரசிக்கு உரிய விலையுயர்ந்த உடைகளையே நான் உடுத்த விரும்பினார். 'அவைகள் வெறும் ஆடைதானே' என நானும் சாதாரணமாய் எண்ணிக் கொண்டு, என் கணவருக்காக உடுத்தினேன்! ஆனால் என்னை ஆட்கொண்டு நடத்திய அன்பின் தேவன், நான்

சாதாரணமாக எண்ணியதை மறுத்தார்! இருப்பினும் "தேவபக்தியான பெண்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரம் தகுதியானதல்ல" என்பதை என் கணவரிடம் சொல்ல எனக்கு போதுமான தைரியம் இல்லாததுபோல் உணர்ந்தேன்.

**என் வயதிற்கு ஒத்த பெண்மணிகள் உடுத்தியிருக்கும் விலையுயர்ந்த ஆடைகளை விட, என்னுடைய உடுப்பிலும் ஓர் பக்திக்குரிய வித்தியாசத்தை வைத்தே, நான் கர்த்தரை பின்பற்ற முடியும் என்பதை உணர்ந்தேன்.**

ஆகிலும், எனக்குள் படிந்திருந்த மாயை "நாகரீக பேஷன்" பின்பற்றுவதில் என்ன தவறு? என எனக்குள் பாசாங்கான எண்ணத்தை எழுப்பியது. இந்த நிலையில்தான், நான் எச்சரிக்கை பெற்றேன்! ஆவிக்குரிய நிலையை விசாரிக்கும் சபையின் போதகர்கள், தேவனுடைய இருதயத்தைப் பாதிக்கும் ஒவ்வொன்றையும் அறிந்திருந்தால், நலமாய் இருக்குமே, என்றே யோசித்து பார்த்தேன். ஏனெனில், இவர்கள் ஸ்திரீகளுக்குரிய மாயையை சரியாய் எடுத்துப் போதிக்கவில்லை என்பது மாத்திரமல்ல, பெண்களின் வசீகர மாயைக்கு, அழகு வர்ணனை தந்து, தூண்டிவிட்டு, தூபம் காட்டுகிறார்கள் என்ற அவல நிலையே பிரசங்க மேடையில் இன்னமும் இருக்கிறது! **ஆவிக்குரிய ஒரே ஒரு நல்ல போதகன் ஆலய மேடையில் இருந்திருந்தால், நான் இவ்வளவு தூரம் மாயைக்குள் சென்றிருக்க மாட்டேன்.** எனக்குள் இருந்த மாயையோ, பொது ஜனத்தின் அபிப்பிராயங்களை சார்ந்து கொண்டு, அவர்களது நடை, உடை பாவனை சரிதான் என என்னை தொடர்ந்து தூண்டியது! இவ்வித என் சொந்த சந்தேகங்கள் 'கவர்ச்சியை நாடுகின்றது' என்ற உண்மையை நான் ஆணித்தரமாய் கண்டு, மாயைக்கு முற்றிலும் விலகி நிற்க ஆணித்தரமாய் தீர்மானித்தேன்!

– மேடம் குயான்

---

## அக்கினி பிரசங்கங்களால் 'பாவ துர்நாற்றம்' ஒழித்திட வேண்டும்!

**உ**த்தம ஊழியம் செழித்திருக்க வேண்டிய இந்நாட்களில், கொள்கையில் கூத்தாடும் யெகோவா சாட்சிகளும், ஏழாம் நாள் அட்வெந்துகளும், கத்தோலிக்க மார்க்கத்தாரும்..... இன்னும் உபதேச வேற்றுமை கொண்ட பலர் கிறிஸ்துவின் மகிமைக்கு களங்கமாய் ஆக்கிரமித்துள்ளார்கள். ஒரு சாதாரண உண்மை கிறிஸ்தவன், சுவிசேஷத்தை தன் காதுகளால் கேட்டிருக்கிறான்..... ஆனால் அவனது கண்களும் அவனது ஆத்துமாவும் திவ்ய வல்லமையின் தொடுதலை ஒருபோதும் கண்டு அனுபவிக்கவில்லை. இப்போதுதான் மனந்திரும்பி

வந்த இந்த புதிய ஆத்துமா "உங்கள் தேவன் எங்கே இருக்கிறார்?" என கேட்கிறானே.... அவனுக்கு நாம் என்ன பதிலை கூறிட முடியும்?

இன்றைய நடைமுறையான கிறிஸ்தவத்தை நேர்மையான உள்ளத்தோடு சந்திக்க நீங்கள் துணிந்தால், அது உங்களுக்கு மிகுந்த வேதனையைத்தான் தரும். பொதுவாக நம்மில் அனைவருமே 'உபதேசத்தில்' நல்ல அறிவு கொண்டவர்களாய் இருக்கிறோம். ஒரு பொதுவான பிரசங்கி பேசுவதை கேட்கும் இன்றைய கிறிஸ்தவன், அவர் அடுத்து என்ன பேசுவார் என தெரியுமளவிற்கு, வேத அறிவு இருக்கதான் செய்கிறது. ஆனால் ஆவியின் உண்மையான சத்தியத்தின் கூர்மை..... 'தொட்டவுடன் வெட்டிவிடும்' சவரகத்தியின் பதத்தை விட அதிக கூர்மை கொண்டதாகும். உலகத்தின் பல பகுதியிலும் உள்ள ஊழியர்கள், தங்களின் பயனில்லாத மழுங்கிப்போன பிரசங்கத்திற்காக துக்கமடையத்தான் செய்கிறார்கள். சிறந்த பிரசங்கங்கள் என இவர்கள் கூறிக்கொண்டது கூட, மிக பிரகாசமான 'கேமரா - பல்பு' போலவேதான் இருக்கிறது. ஸ்விட்ச் செய்த அடுத்த வினாடியே, கண்கூசும் ஒளியை தந்துவிட்டு அந்த பல்பு ப்யூஸ் ஆகி எரிந்து விடும். **இன்றைய சுவிசேஷ ஊழியமும் 'நொடிப் பொழுது ஒளி தந்து'..... அடுத்த வினாடி வல்லமை அற்றதாய் வீழ்ச்சி அடைந்துள்ளது!**

சபைகளில் 'எழுப்புதல் - சுவாசம்' வந்து விட்டதாக கூறி கொள்கிறோம். ஆனால், தேவனை அறியாத கோடி கோடி ஜனங்கள் 'விழித்து - எழுப்பப்படவில்லையே?' சுவிசேஷகர்கள் நடத்தும் கூட்டங்களைப் பாருங்கள். முன்னாள் வந்து அமரும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதிகபட்சம் கிறிஸ்தவர்கள்தான்! இன்று நமக்கு தேவைப்படுவதெல்லாம், **ஜெனரல் பூத்** சகோதரனைப் போன்ற 'ஆத்தும வாஞ்சை கொண்ட' ஊழியர்களே! இவர்கள் மாத்திரமே கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் உயர் மக்களுக்கும், தாழ்ந்த மக்களுக்கும், ஆத்தும பாரத்தோடு பாவிகளைச் சந்திக்க விரைந்து செல்லும் ஊழியர்கள்!

ஒரு முற்கால பரிசுத்தவான் இவ்வாறு பாடுவதுண்டு:

"ஓ தேவா, நொறுங்குண்ட இருதயமே எனது பாக்கியம்!

அதுவே, பாவ மாந்தர்களை மீட்க புலம்பும் ஓர் இருதயம்"

இந்த பாடல் வரிகளில் மூன்று முக்கியமான பகுதிகள் உண்டு: முதலாவதாக: "ஓர் நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை தேவன் புறக்கணிக்க மாட்டார்" என்பதாகும். தேவன் மெய்யாகவே "நொறுங்கியவைகளை மாத்திரமே" பயன்படுத்துகிறார்.

உதாரணமாக, ஒரு சிறு பையன் தந்த அப்பத்தை இயேசு பிட்டார் அல்லது நொறுக்கினார்! அதன் பின்புதான், அந்த நொறுங்குண்ட அப்பம் திரளான ஜனங்களைப் போஷித்திட முடிந்தது. அதேபோல், நளதப்பெட்டி உடைந்த பிறகுதான் "சுகந்த வாசனை" புறப்பட்டு சென்று அந்த வீடு முழுவதையும் சுகந்த வாசனையால் மணக்கச் செய்தது. இயேசு கூறும்போது "**இது உங்களுக்காக பிட்கப்படும்** அல்லது நொறுக்கப்படும் என்னுடைய சரீரம்!" எனக் கூறினார். இதுதான் நம்முடைய எஜமான் சென்ற வழியாய் இருந்தால், அவருடைய ஊழியக்காரராகிய நாமும் அதே வழியில் நடக்க வேண்டுமல்லவா? இதற்கு மாறாக நம் ஜீவனை, நாம் பத்திரமாய் வைத்திருக்க நாடுவோமென்றால், அந்த நம் ஜீவனை இழப்பது மாத்திரமல்லாமல், இன்னமும் இரட்சிக்கப்பட வேண்டிய ஜனங்களின் ஜீவனையும் நாம் இழந்து விடுவோம்!

இரண்டாவதாக: பாவத்திற்காக அடைந்திடும் மனதுயரம் நமக்கு வேண்டும்! ஏரேமியா தீர்க்கதரிசி "ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீருமாய் மாறினால் நலமாய் இருக்கும்" என கதறினார். இதை சங்கீதக்காரன் கூறும்போது, "என் கண்களிலிருந்து நீர் தாரைகள் ஓடுகின்றன" என கூறினார். அன்புள்ள சகோதரர்களே, இன்று **நம்முடைய இருதயம் வறண்டு இருக்கிறபடியினால்,** நம்முடைய கண்களும் கண்ணீரில்லாமல் வறண்டு கிடக்கிறது. நாட்கள் செல்ல செல்ல நூதனமான ஒத்தவேஷ மாறாட்டமே பெருகி வருகிறது! இரட்சண்ய சேனை ஊழிய தளபதிகளில் இருவர், வில்லியம் பூத்திற்கு கடிதம் எழுதும்போது "நாங்கள் எவ்வளவோ முயன்று பார்த்தோம். ஒரு பலனும் இல்லை!" என எழுதினார்கள். அதற்கு பதில் எழுதிய வில்லியம் பூத் "**கண்ணீரை சிந்திப் பாருங்கள்!**" என எழுதினார். தன்னுடைய ஆசான் கூறியதை முயற்சித்த அந்த ஊழியர்கள், மாபெரும் எழுப்புதலைக் கண்டார்கள்.

வேதாகம கல்லூரிகள் "கண்ணீர் சிந்த" கற்று கொடுப்பதில்லை. அவர்களால் கற்றுக் கொடுக்கவும் முடியாது. ஆம், ஆவியானவர் மாத்திரமே, நாம் கண்ணீர் சிந்த கற்றுத் தர முடியும்!

ஒரு பிரசங்கி ஏராளமான பட்டங்களை 'பொதி சுமையைப் போல்' சேர்த்து வைத்துக் கொண்டாலும், இந்நாட்களில் தாண்டவமாடும் பாவங்களின் கொடுமையை குறித்து 'ஆத்தும வருத்தம்' அவருக்கு இல்லை யென்றால் அவர் பெற்ற பட்டங்களால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. டேவிட் லிவிங்ஸ்டன் தன் ஜெபத்தில் அடிக்கடி "ஆண்டவரே, இந்த உலகத்தின் சீழ் பிடித்த

பாவங்கள், என்று குணமாகும்?'' என்றே கதறினார். பாவத்தில் அழியும் ஆத்துமாக்களுக்காக மனபாரம் கொண்டவர்கள் இன்று வெகு சொற்பமே இருக்கிறார்கள்!

ஸ்காட்லாந்து தேசத்து ஆண்ருபோனர் வெல்ஸ் என்ற தேவதாசன் படுக்கையிலிருந்து நள்ளிரவு ஜன்னலைத் திறந்து பார்த்து சினிமா கொட்டகைகளிலிருந்தும், சாராய கடைகளிலிருந்தும் சாரை சாரையாய் செல்லும் ஜனங்களைக் கண்டு ''ஐயோ இந்த ஜனங்கள் அழிகிறார்களே! நான் என் செய்வேன்? இவர்கள் அழிந்து போகிறார்களே!'' என்றே கதறுவார். இதையெல்லாம் பார்க்கும் போது, அவர்களைப்போல் நாம் இன்னமும் கிறிஸ்துவை கற்றுக் கொள்ளவில்லை! இன்றோ, பாரமும் கண்ணீருமற்ற, உயிரில்லாத பிரசங்கங்களை செய்து விட்டு, மீதியான நேரங்களை உலகத்தார் போலவே ஆடம்பரத்தில் வாழும் தனக்கானதைத் தேடும் பிரசங்கிகள்தான், பெருகி வருகிறார்கள்!

மூன்றாவதாக: அது பாவத்தின் கொடுமை! ''மூடர் பாவத்தை குறித்து பரியாசம் பண்ணுகிறார்கள்'' என்றே வேதம் கூறுகிறது. இன்று சிலர் ''கொல்லும் பாவங்கள் ஏழு'' என பிரித்து வைத்திருக்கிறார்கள். இதன் விளைவாய் ''இதுவெல்லாம் கொடிய பாவம் அல்ல'' என பிரித்து பார்க்க துவங்கி விட்டார்கள். பாவம், அது எந்த ரூபமாயிருந்தாலும் நம் ஆத்துமாவை கொல்லும் பாவங்களே ஆகும்!

ஒரு கிரேக்க பாரம்பரிய கதை ஒன்று உண்டு. ஈப்பியன்ஸ் நாட்டு மன்னன் **ஆகாய்** மிக பெரிய மாட்டு தொழுவம் ஒன்று வைத்திருந்தான். ஓர் அறையில் '*ஹெலியஸ்*'தேவதைக்கு பலியிடுவதற்காக பன்னிரண்டு வெள்ளை நிற காட்டு எருமைகளை கட்டி வைத்திருந்தான். ஆனால் அந்த தொழுவம் சில ஆண்டுகளாய் சுத்தம் செய்யப்படவில்லை! ஒருநாள் திடீரென்று, அந்த தொழுவத்தை ஒரே நாளில் சுத்தம் செய்யுமாறு அரசன் கட்டளையிட்டான். அரச கட்டளையை நிறைவேற்றுவதற்கு '*ஹெராகிளஸ்*' என்பவன், கிரேக்க நாட்டின் **ஆல்பியஸ், பெனியஸ்** என்ற இரு நதிகளை இந்த தொழுவத்திற்கு போகும்படி திருப்பி வைத்து விட்டான்! என்பதே அந்த கதை!!

இன்று சபையிலுள்ள ஜனங்களின் துன்மார்க்க நாற்றம் பிடித்த வாழ்க்கையைப் பாருங்கள்! தங்கள் பாரம்பரிய பக்தியை, துர்நாற்றத்தை போக்கும் பன்னீரை தெளித்ததைப் போல் தெளித்து, தொடர்ச்சியாய் பாவகிடங்கில் கிடக்கிறார்கள்! இந்த பாவ தொழுவத்தை துடைத்து சுத்திகரிப்பதற்கு, மனம் உடைந்த அழுகை தேவை! தீர்க்கமான ஜெபம் தேவை! அக்கினி பற்றி எரியும்

வலிமையான பிரசங்கம் தேவை! ஆம், இந்த நதிகளே..... பாவ துர்நாற்றத்தை ஒழித்து, பூரண தூய்மையை தரமுடியும் என்பதை, மெய்யான தேவ மாந்தர்கள் உணர்ந்து செயல்படுவார்களாக!!

– லியோனார்டு ரேவன்ஹில்

---

## 'சீஷர் உருவாகாத சபையில்' சங்கடங்கள் அதிகம்!

**கி**றிஸ்து இல்லாத கிறிஸ்தவர்கள், சபைகளில் எக்காலமும் இருந்தே வருகிறார்கள். தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்ட போதிலும், தேவ பார்வையில் அவர்கள் கிறிஸ்து அல்லாதவர்களே! கிறிஸ்து மார்க்கத்துக்குரிய ஆராதனைகள், சபையின் வருடாந்திர கூட்டங்கள், சபை போற்றும் உபதேசங்கள், மற்றும் ஆசாரங்களை அவர்கள் அனுசரித்தபோதிலும் **கிறிஸ்துவுக்கு அவர்கள் ஜீவியத்தில் இடமில்லாததால்,** அவர்களின் ரட்சிப்பைத் தொடர்ந்து, எந்த மாறுதலும் ஏற்படவில்லை. அவர்கள் பேச்சு, செய்கை, நடக்கையை வைத்து மாத்திரமே, அவர்கள் கிறிஸ்துவை உடையவர்களோ, கிறிஸ்தற்றவர்களோ என்பதை அறியலாம். உலகிலுள்ள மார்க்கங்களில், கிறிஸ்து மார்க்கமும் ஒன்று என உலக பக்தன் கூறினாலும், இது தேவ மார்க்கம், இது ரட்சிப்பின் மார்க்கம் என்பதை அவர்கள் அறியவில்லை. கிறிஸ்தவர்கள் என்னும் பெயர் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டதல்ல! அவர் ஒரு மார்க்கத்தை உண்டாகும்படி வந்தவரல்ல. கிறிஸ்துதான் கிறிஸ்து மார்க்கம்!! தெய்வ மகிமைக்கு ஒரேவழி அவர்தான்!

தம்மை நம்பி ஏற்றுக்கொண்டவர்களை சீஷர் என்று அழைத்தார். அவர் அப்போஸ்தலரை அனுப்பின போது: "நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் கிறிஸ்தவர்களாக்குங்கள் என்று சொல்லாமல், சீஷர்களாக்குங்கள்" என்றே கட்டளையிட்டார். சீஷர்கள் என்பதுதான் ஆண்டவர் தமது அடியாருக்குக் கொடுத்த பெயர். சுவிசேஷத்திலும், நடபடிப் புஸ்தகத்திலும் சீஷர்கள் என்னும் சொல் ஏராளமாய் வருகிறது. கிறிஸ்தவர்கள் என்னும் சொல்லோ மூன்று இடங்களில் மாத்திரம் வருகிறது.

அந்தியோகியாவில் இயேசுவின் சீஷர்களைக் கவனித்த மற்றவர்கள் "அவர்களின் ஆச்சரியமான தெய்வகுணத்தைக் கண்டு" அவர்களைக் கிறிஸ்தவர்கள் என்றார்கள்!

அகிரிப்பா ராஜா, பவுலைப் பார்த்து: நீ என்னைக் கிறிஸ்தவனாக்கிவிடுவாய் போலிருக்கிறதே என்றான்! பேதுரு, விசுவாசத்திற்காக பாடுபடும் கிறிஸ்தவனைப்பற்றி எழுதுகிறார்!

*இவ்வாறு குருவின் சாயலை பிரதிபலிக்கும் சீஷர்களாயிருப்பவர் களுக்குத்தான் கிறிஸ்தவர்கள் என்னும் பேர் தகுமேயன்றி, எல்லோருக்கும் தகாது!*

ஒருவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்வது எளிது! கிறிஸ்துவின் சீஷன் என்று சொல்லுவதோ கஷ்டம்! ஆண்டவரிடம் கற்றுக்கொண்டு, அனுதினமும் அதாவது, ஒவ்வொரு நாளும் சத்திய போதனைக்கு சேதம் வராது, அவரைப் பின்செல்லுகிறவனே சீஷன். அப்படிப்பட்ட சீஷர்களைக் கொண்டு மாத்திரமே ஆண்டவர் தமது சொந்த சபையை ஸ்தாபித்தார்!

*ஆனால், இன்று சபைகளில் இருக்கிறவர்கள் எப்படிப் பட்டவர்கள்? "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல" பின்னே, அவன் யாருடையவன்? ஆம், அங்கு உட்கார்ந்திருக்கும் கிறிஸ்தற்ற மனுஷர், தங்கள் ஜென்ம சுபாவத்தைக் காண்பிப் பார்களேயன்றி தெய்வீக பண்புடன் நடக்க மாட்டார்கள்! நடக்கவும் தெரியாது. சபையில் காணப்படும் சகல குழப்பங்களுக்கும், விரோதங் களுக்கும்* **ஜீவிய மாறுதல் இல்லாத இவர்களே,** *காரணமாயிருக்கிறார்கள்.*

*சபையார் ஆண்டவருக்கு உகந்தவர்களாய் நடந்து கொள்ள வேண்டும் என்பது எவ்வளவு உத்திரவாதமோ, அதே போன்ற உத்திரவாதம் சபையின் போதகருக்கும் உண்டு! தன் ஆண்டவருக்கு உத்தம ஊழியம் செய்திட, இவர்கள் அயராது பாடுபடுவர்கள்!*

*கிறிஸ்தற்ற சபையார் நடுவில் ஒரு நல்ல போதகர் ஊழியம் செய்வாரானால், அவருடைய ஆத்தும பாரத்திற்கும், கவலைக்கும் அளவே இராது!*

*அதுபோலவே, தேவ பக்தியில் வாஞ்சை கொண்ட ஓர் சபை மக்கள் மத்தியில், சத்தியத்தில் நிலை நிற்காத பொறுப்பற்ற போதகர் ஒருவர் இருப்பாரானால், சபையார் சஞ்சலப்படாதிருக்க மாட்டார்கள்!*

*அதேசமயம், கிறிஸ்தற்ற சபை மக்களுக்கு, கிறிஸ்தற்ற ஊழியர்களின் அனல் இல்லாத குறைவு தெரியாது. ஜீவன் பெற்ற தேவமக்களோ, அதை..... ஒரு நிமிஷத்தில் கண்டுகொள்வார்கள்! இப்படியிருக்க, ஒரு சபையில் கிறிஸ்தற்ற போதகரும், கிறிஸ்தற்ற சபையாரும் ஆகிய* **இருதிறத்தாரும் ஜீவன் இழந்து இருந்தால்** *நிலைமை எவ்வளவு மோசமாயிருக்கும் என்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள்! இன்றுள்ள சபைகளில், இந்த இருதிறத்தாரில்* **ஒருவர்கூட ஜீவன் பெறாதவர்களாய்** *இருக்கும் அபாயமே இன்று நிலவி வரும் கொடிய துயரம்!!*

*– பரமானந்தம் ஐயர்*

## ஜீவனைப்பார்க்கிலும் கிருபையே நல்லது! அதுவே, நம் பாதுகாப்பு!

"**ஜீ**வனைப் பார்க்கிலும்" உமது கிருபை நல்லது! என விளம்பும் சங்கீதம்*63:3* எத்தனை உற்சாகமாயுள்ளது! இந்த உலக ஜீவியத்தின் லாபமோ, நஷ்டமோ அல்லது துன்பமோ இன்பமோ..... ஆகிய அனைத்தையும் பார்க்கிலும் **அவரது கிருபையே** மிகவும் நல்லது. இந்த உலகத்தில் நாம் கொண்ட ஜீவியம் "வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலம்!" என்ற உண்மையை அறிந்துணர்ந்த தாவீது, "என் ஆத்துமா உம்மீதே தாகமாயிருக்கிறது!" என தன் ஜீவியத்தின் அனைத்து இன்ப - துன்ப கிரியைகளைப் பின்னால் வைத்து "அதிகாலமே தேவனைத் தேடி..... அவர் மீதே தாகம் கொண்டார்!" (சங்.*63:1*). இதற்கு பதிலாக, காலமே தொடங்கி இந்த உலக ஜீவியமே பெரிதென ஓட தொடங்குபவன், கானல் நீருக்காக ஓடி, யாதொன்றினாலும் தாகம் தீர்க்கப்படான்!

**தாவீதோ, 'அதிகாலமே' தேவனைத் தேடி, 'தாகம்' தீர்ந்த அவரது அறிக்கையே "ஜீவனைப் பார்க்கிலும், அல்லது 'இந்நாளுக்குரிய எந்த நிகழ்வைக் காட்டிலும்' உமது கிருபை நல்லது" என்ற துதியின் முழக்கமாய் இருந்தது!**

அதேபோல், பவுல் கற்றுக்கொண்ட கிருபையின் ஆச்சரியமே! நமக்கும் வேண்டும்! குறிப்பாக ஊழியத்தில் அவருக்கு ஏற்பட்ட 'மாம்சத்தில் ஒரு முள்' தந்த வேதனை, துன்பங்கள் ஆகிய இவைகளுக்காக அல்லது "தன் ஜீவனுக்காக" தேவனைத் தேடி வேண்டிக் கொண்ட பவுலுக்கு..... தேவன் கற்றுக்கொடுத்த பாடம் என்னவெனில்: "பவுலே, உன் எவ்வித துன்ப பலவீனத்திலும், என் கிருபையை அன்றோ நீ தேடியிருக்க வேண்டும்! ஏனென்றால், என் கிருபை உனக்குப் போதும்!" என்றே கற்றுக்கொடுத்தார்! விழிப்படைந்த பவுல் "நிந்தைதரும் நெருக்கங்கள்..... நான் தேவனிடம் ஓடி, கிருபையை நாடச்செய்யும் தருணம் என கண்டேன்! ஆகவே, துன்பங்களை..... சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்!" என ஜெயமாய் கெம்பீரித்தார்!! (2கொரி.*12:8,9*). "ஜீவனைப் பார்க்கிலும்" உமது கிருபையே நல்லது! என்ற உண்மையை அனுபவித்தார்!

"இந்த உலகின் ஜீவியத்திற்காக ஓடி, போஜனத்திற்காக உழைத்தவர்கள், கஷ்டங்களுக்காய் பாடுபட்டவர்கள், பலனடையவில்லை! ஆகையால், **கிருபையினால் இருதயம் ஸ்திரப்படுவதே** நல்லது" என அறிவிக்கும் தேவ வசனத்திற்கு செவி கொடுப்போமாக! (எபி.*13:9*). ஆம், இந்த ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது! என அவர் பாதம் ஓடி, அவரது கிருபையினால் இருதயம் ஸ்திரப்படுவதே நமது சிலாக்கியம்! நமது பாதுகாப்பு!!

– T.ரத்தினகுமார்



# ஜாண்வெஸ்லி,

## 'பரிசுத்தமாகுதலின் சத்தியத்தை' உயர்த்திய மிஷனெரி!

**(1703 – 1791)**

இரட்சிக்கப்பட்டு, பரிசுத்தமாகுதலின் ஜீவியத்திற்குள் பிரவேசித்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனோடு நெருங்கிய உறவை பெற்றுக் கொள்ள முடியும் என்ற செய்தியே ஜாண் வெஸ்லியின் பிரதான செய்தியாய் இருந்தது. தனது 5–ம் வயதில், குருகுலத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஜாண்வெஸ்லி உயிர் பிழைத்தார். அந்த நிகழ்ச்சி, தேவன் அவர்மீது வைத்த விசேஷித்த கிருபைக்கு முத்திரையாய், ஜாண் வெஸ்லிக்கு மாறியது.

தன் வாலிபத்தில், இங்கிலாந்து வந்தவுடன், ஆங்கிலிக்கன் சபைக்கு பிரசங்கியாய் மாறினார். ஆகிலும், அன்று வெளியே சுவிசேஷகராய் ஊழியம் செய்த ஜார்ஜ் ஒய்ட்பீல்டோடு தன்னையும் இணைத்துக் கொண்டார். பாரம்பரிய கிறிஸ்தவர்களைவிட, வெளியே உள்ள பாவியே அதிக தேவையுடன் இருப்பதாக கூறிய வெஸ்லி, தனது குதிரையில் 2,50,000 மைல்கள் பயணித்தார். 30,000 வெள்ளி காசுகளை செலவு செய்தார். சுமார் 40,000 உயிர் ஊட்டும் பிரசங்கங்களை பிரசங்கித்தார்!

திரண்டு வந்த ஜனங்களிடம், எந்த போதகத்திற்கும் வேதாகமம் ஒன்றே அத்தாட்சி! என வேத வாக்கிய மகிமையை உயர்த்தி காண்பித்த ஜாண் வெஸ்லியை, அன்றைய ஸ்தாபக சபை சந்தேகங்களையும், எதிர்ப்புகளையும் அவர்மேல் அள்ளி வீசியது! இந்த துயரங்கள் போதாதென்று, அவரது மனைவி "ஜாண் வெஸ்லியின் தூய கற்பு ஒழுக்கத்தை எள்ளி நகையாடி, பொது கூட்டங்களில் தூற்றினாள். அவல பெண்கள் ஜாண் வெஸ்லிக்கு எழுதிய கடிதத்தை, தன் கைப்பட திருத்தி, தன் சொந்த கணவனுக்கு களங்கம் செய்தாள். களைப்புடன் வீட்டிற்கு வரும் ஜாண் வெஸ்லியின் முகத்தில் அழுகிய முட்டைகளை வீசி அவமதித்தாள். தன் உடன் ஊழியரோடு முற்றத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது, கோபமாய் ஓடி வந்து அவர் அழகிய சுருள் முடிகளை பிடித்து இழுத்து கீழே தள்ளி அடித்தாள்." **ஜாண் வெஸ்லியை குறித்து அவர் உடன் ஊழியர்கள் கூறும்போது, அவர் பரிசுத்தமாகுதலைக் குறித்து பிரசங்கித்ததை விட, அவர் வாழ்ந்து காட்டிய நிகழ்ச்சி படலங்கள் எங்கள் உள்ளத்தை வெகுவாய் கவர்ந்து தூய்மைப்படுத்தியது என கூறினார்கள்.** தான் நியமனம் செய்த சபைகளில் மூன்று காரியங்களை 'மெத்தடாக' (Methods) அல்லது பண்பு ஒழுக்க கட்டளையாக வலியுறுத்தியபடியால் அவரது சபை மெத்தடிஸ்ட் சபை என்று பெயர் பெற்றது.

**முதல் பண்பு : தீமை எந்த ரூபத்தில் அணுகினாலும் தவிர்த்து விடுங்கள். ஒருவருக்கும் தீமை செய்யாதீர்கள்.**

**2வது பண்பு : முடிந்த மட்டும் எல்லா மனுஷருக்கும் சகல நன்மையும் செய்ய நாடுங்கள்.**

**3வது பண்பு : தேவனுடைய கட்டளைகள் அனைத்தையும் கவனமாய் பின்பற்றுங்கள்!**

மெய்யாகவே, ஜான் வெஸ்லி பரிசுத்தம் நிறைந்த பண்புகளை மக்களுக்கு வெளிக்காட்டிய 'மெத்தடிஸ்ட்' ஆக பிரகாசித்தார்!

*- கர்த்தரின் தீபங்கள்*

## ஓ வாலிபனே "திடமனம்" கர்த்தர் மாத்திரம் தரும் பாக்கியம்!

ஒரு வீட்டிற்கு நான் சென்றிருந்தேன். வீட்டிற்கு முன்னாலுள்ள நன்றாகப் பெருக்கிச் சாணம்போட்டு மெழுகின வெளிமுற்றத்தில் முற்றும் முடமான ஒரு ஏழை மகள் உட்கார வைக்கப்பட்டிருந்தாள். அவளின் அழகிய முகத்தைக் கண்ணோக்கினேன். அவள் உருவத்தில் சிறியவளாயிருந்தாலும் வயதில் வாலிபத்தை அடைந்திருந்ததை நான் துக்கத்தோடு கண்டேன். அவளுடைய முடமான கால்களை எறும்புகள் கடித்துக்கொண்டிருந்தன. அந்த ஏழை மகளைக் கண்ணோக்கிய பின்னர் வேதனையோடு வீட்டினுள்ளே சென்று, அந்த வீட்டின் கட்டிலில் அமர்ந்தேன். அன்பு பிள்ளையின் தகப்பனை சந்திக்க காத்திருந்தேன்! சற்று நேரத்தில் நான் உட்கார்ந்திருந்த கட்டிலின் கீழ் சப்தம் உண்டாக்குவது என்ன என்று கண்டறியும் பொருட்டு கீழே நான் குனிந்து நோக்கியபோது ஒரு நடக்கமுடியாத ஒரு அன்பு மகன் தன் கால்களை இழத்துக்கொண்டு தவழ்ந்து வருவதைக் கண்டு துடிதுடித்துப்போனேன். இந்த வரிகளை எழுதும்போது கூட அந்தத் துயரக் காட்சியை நான் ஒருமுறைப் பின்நோக்கித் திரும்பிப் பார்க்கையில் என் கண்கள் கண்ணீரால் நிரம்புகின்றது.

அந்த அன்புப்பிள்ளைகளின் தாயார் அந்த இரு பிள்ளைகளுக்காத் தினமும் எடுத்துக் கொள்ளும் பாடுகள், பிரயாசங்கள் இங்கு நான் அத்தனை சுலபமாக எழுதிவிட முடியாது. முற்றும் முடமான தன் இரு பிள்ளைகளுக்குத் தினமும் ஒரு தாய் என்னென்ன பணிவிடைகளை எல்லாம் வேதனையோடு செய்ய வேண்டும் என்பதை சற்றே யோசித்துப் பாருங்கள்!

அந்த தாயார் கூறியபோது "இந்த 23 வருட கண்ணீரின் பள்ளத்தாக்கை கடக்க என் தேவன்தான் எனக்குப் பெலனளித்து வருகின்றார். இன்னும் மீதியான காலங்களையும் பொறுமையோடே நான் கடக்க ஆண்டவர்தான் எனக்குப் பெலன் கொடுக்க வேண்டுகிறேன். என் பரலோக நியாயாதிபதியிடத்தில் இரக்கத்திற்குக் கெஞ்சி நிற்கிறேன். இந்த நீண்ட கால வேதனை என் சரீரத்திற்கு மாத்திரமல்ல, என் ஆத்துமாவுக்கும் மிகுந்த சோர்பை உண்டாக்குகிறது. இவைகளின் மத்தியிலும் கர்த்தருடைய கிருபையின் கரம் ஒவ்வொரு நாளும் என்னைத் தாங்கி வழி நடத்தி வருகிறது. அவருடைய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக." என்று திடமனதுடன் கூறினார்கள்!

வாழ்வின் எந்த பிரச்சனைக்கும் வேண்டிய "மனதிடன்" கர்த்தரை நம்பி வாழ்பவர்களுக்கு மட்டுமே உண்டு! அன்பார்ந்த வாலிப சகோதரனே, உன் இளமையின் திடம் மாயை என்பதை அறிந்து..... கர்த்தரை நம்பி அண்டிக்கொள். அவர் ஒருவரே உன்னை "திடமனதுடன்" வாழ கிருபை செய்வார்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.